**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ESTABLISHMENT OF ROUGH STONE QUARRY OWNED BY THIRU.K. VENKATRAMAN IN AN EXTENT OF 1.50.0 HA AT S.F.NO: 106 (Part-II) & TMT. S. SUMATHI IN AN EXTENT OF 1.50.0 HA AT S.F.NO: 106 (Part-III) OF PALAPATTI VILLAGE, VAZHAPPADY TALUK, SALEM DISTRICT ON 03.09.2024 AT 11.00 A.M. IN M/S. AISHWARYAM MAHAL, PERUMAL KOVIL BUS STOP, BELUR MAIN ROAD, MINNAMPALLI VILLAGE, VAZHAPPADI TALUK, SALEM DISTRICT.**

| | | |
|---|---|---|
| 1. **Tmt. A. Abinaya** | : | **Revenue Divisional Officer, Salem** |
| 2. **Er. G.Udhayakumar** | : | **District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Salem** |

**PROJECT PROPONENTS**

| | | |
|---|---|---|
| 1. **Thiru. K.Venkatraman** | : | **The Propriter, K.Venkatraman Rough Stone Quarry, Palapatti Village, Vazhappady Taluk, Salem District** |
| 2. **Tmt. S. Sumathi** | : | **The Propreitrix, S.Sumathi Rough Stone Quarry, Palapatti Village, Vazhappady Taluk, Salem District** |

Public attended - 106 Nos. (List enclosed)

At the outset, the District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Salem has welcomed the Revenue Divisional Officer, Salem, Government officials, environmentalists and the public present in the public hearing meeting conducted on behalf of Tamilnadu Pollution Control Board. He informed that since the above project falls under the B1 Category and Schedule 1A of Environment Impact Assesment Notification No. S.O 1533 dated 14.09.2006 issued by the Ministry of Environment, Forest and Climate Change, it is necessary to conduct the public hearing to consider the issue of environmental clearance for the project. Hence, the public hearing meeting is now being conducted for the above said project as per the direction of State Environment Impact Assessment Authority. He also informed that the Public Notices were published in English daily newspaper (The New Indian Express) on 27.07.2024 and Tamil daily newspaper (Dhinathanthi) on 27.07.2024 with the approval of the District Collector, Salem for the conduct of this public hearing meeting on 03.09.2024 at 11.00 A.M. in the venue of M/s. Aishwaryam Mahal, Perumal Kovil Bus Stop, Belur Main Road, Minnampalli Village, Vazhappadi Taluk, Salem District. The detailed study report on Environment Impact Assesment relating to the establishment of proposed rough stone and gravel quarry project would be presented by the project

proponent and their EIA Consultant through power point presentation to the public. The project proponent and the EIA Consultant will answer and give clarifications to the questions raised on environmental issues by the public if any relating to the project. He has also requested the public to offer their views, opinions and suggestions about the proposed project after mentioning their name and place of their nativity. He informed that all the views and suggestions raised by the public in the meeting and the clarifications given by the project proponent and their EIA Consultant would be recorded in both audio and video and the same would be submitted to the State Environment Impact Assessment Authority for further necessary action. After his brief speech, he had requested the Revenue Divisional Officer, Salem to preside over the public hearing meeting.

The Revenue Divisional Officer, Salem has requested the project proponent and their EIA Consultant to present their proposed project details to the public through the power point presentation in detail.

The EIA consultant of the project has welcomed all the gatherings and briefed about the proposed project with the help of power point presentation. He detailed the environmental factors and its impacts on the Environment such as Land, Soil, Water, Air and Noise due to the proposed project in the said location. He also detailed about the Ambient Air Aquality survey conducted within the core zone of 500 m radius and Water samples collected on surface water and Borewell and the openwell within the core zone of 500 m radius from the proposed project.

After the technical presentation of the consultant, the District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Salem has requested the public present in the meeting to air their views regarding their opinions, doubts, apprehensions and suggestions regarding environmental issues about the proposed quarry project.

Accordingly, the following village public and the Environmentalists have raised comments and suggestions in the public hearing meeting. The views and suggestions of the public are detailed as below.

1. **Thiru. Aathimoolam, S/o Mani, Palapatti Village, Vazhappady Taluk:**

   He welcomed the project and stated that he is working as a Driver and the proposed project will be helpful to their livelihood.

2. **Thiru. Ayyamperumal, S/o Kandasamy, Palapatti Village, Vazhappady Taluk:**

   He stated that he is residing in the same locality and expressed his greetings and no objection for the proposed project.

3. **Thiru. Murugan, S/o Kanthan, Palapatti Village, Vazhappady Taluk:**

   He stated that he has no objection for the proposed project of quarrying activity.

4. **Thiru. Raja Periyasamy, S/o Perumal, Vilampatti Village, Vazhappady Taluk:**
He informed that he is working as a motor mechanic and welcomed this project since the proposed project will provide employment to him.

5. **Thiru. Suresh, S/o Chinnapaiyyan, Palapatti Village, Vazhappady Taluk:**
He stated that he is having a welding workshop in the same locality and if the proposed project commences, it will provide him oppurtuniny and employment to his welding shop workers and hence, he welcomed the quarry project.

6. **Thiru. Sankar, S/o Ganesan, Palapatti Village, Vazhappady Taluk:**
He stated that he is working as a Driver and the proposed project will provide employment to him and will be helpful to his livelihood and hence, he expressed his support to the project and welcomed the quarry project.

7. **Thiru. Selvamanickam, S/o Angamuthu Gounder, Koottathupatti Village, Vazhappady Taluk:**
He stated that he is having an agricultural field nearby to the proposed quarry project, however informed that he has no objection and welcomed the quarry project.

8. **Thiru. Manikandan, S/o Selvamanickam, Anuppur Village, Vazhappady Taluk:**
He stated that he is working as a Lorry Driver and the proposed project will provide employment to him and will be helpful to his livelihood and hence, he expressed his support to the quarry project.

9. **Thiru. Ramanathan, S/o Kaliappan, Koottathupatti Village, Vazhappady Taluk:**
He stated that he is working as a private construction Contractor outside the village and if the quarry project commences, he will get the work and employment in his native village itself and hence this project will be helpful to him. He expressed his support to the quarry project.

10. **Thiru. Vijayan, Anuppur Village, Vazhappady Taluk:**
He stated that he is working as a construction Contractor in Ayothiyapattinam Panchayat which is about 20 km far from his native village. He informed that, since the stone quarry and M-Sand materials are not available in the nearby area, he ought to procure the same from outside area and hence the cost of the materials and truck rent were high which is not affordable to their contractor work.

He requested the Government to permit this quarry project so that their village people also will get the building construction materials at a cheaper cost and hence this project will be helpful not only to him but also to the poor people. He expressed his support to the quarry project.

The Revenue Divisional Officer, Salem has also requested the public present in the meeting to air their views regarding their opinions, doubts, apprehensions and suggestions regarding environmental issues about the proposed quarry project.

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Salem has thanked the public gathered with which the public hearing came to an end.

The list of public attended the public hearing meeting along with the Audio and Video of the entire proceeding is also enclosed.

3.9.2024

**District Environmental Engineer**
**Tamil Nadu Pollution Control Board**
**Salem**

03/09/24

**Revenue Divisional Officer**
**Salem**

**சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், பாலப்பட்டி கிராமம், புல.எண்.106(பகுதி-2) மற்றும் 106(பகுதி-3)ல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.K. வெங்கட்ராமன் மற்றும் திருமதி.S.சுமதி சாதாரண கல் குவாரிகளின் உத்தேசிக்கப்பட்ட திட்டத்திற்கு 03.09.2024 அன்று முற்பகல் 11.00 மணியளவில் சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், மின்னாம்பள்ளி கிராமம், பேளூர் மெயின் ரோடு, பெருமாள் கோவில் பஸ் நிறுத்தத்திலுள்ள தி/ள். ஐஸ்வர்யம் மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள்.**

முன்னிலை :-

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி.அ.அபிநயா | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சேலம். |
| 2. | திரு.கோ.உதயகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>சேலம். |

நிறுவனத்தினர்

| | | | |
|---|---|---|---|
| 3. | திரு.K. வெங்கட்ராமன் | : | உரிமையாளர்<br>தி/ள்.K. வெங்கட்ராமன் ரப் ஸ்டோன் குவாரி,<br>பாலப்பட்டி கிராமம், வாழப்பாடி வட்டம்,<br>சேலம் மாவட்டம். |
| 4. | திருமதி.S.சுமதி | | உரிமையாளர்<br>திருமதி.S.சுமதி ரப் ஸ்டோன் குவாரி,<br>பாலப்பட்டி கிராமம், வாழப்பாடி வட்டம்,<br>சேலம் மாவட்டம். |

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பொது மக்களின் எண்ணிக்கை-30 ஆகும். (வருகைப் பதிவேட்டின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

கூட்டத்தின் துவக்கத்தில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம் அவர்கள் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்கும் வருவாய் கோட்டாட்சியர் சேலம், அரசு அதிகாரிகள், சுற்றச்சூழல் ஆர்வலர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்றார். சுற்றுச்சூழல் வன மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிப்பு எண்.SO 1533 ன் பி1வகை மற்றும் அட்டவணை 1ஏ ன் கீழ் இந்த திட்டம் வருவதால் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது அவசியம் என்று அவர் கூறினார். எனவே மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மேற்கூறிய

திட்டத்திற்கான பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்படுகிறது. பொது மக்களின் கருத்து கேட்பு கூட்டம் நடத்துவதற்காக மாவட்ட ஆட்சியர், சேலம் அவர்களின் ஒப்புதலுடன் தமிழ் (தினத்தந்தி) மற்றும் ஆங்கிலம் (நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்) ஆகிய செய்தித்தாள்களில் பொது அறிவிப்புகள் 27.07.2024 அன்று வெளியிடப்பட்டன என அவர் தெரிவித்தார். குவாரி நிறுவுதல் தொடர்பான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்த விரிவான ஆய்வு அறிக்கை பவர்பாயிண்ட் விளக்கக்காட்சி மூலம் திட்ட ஆலோசகர் அவர்களால் வழங்கப்படும். திட்ட உரிமையாளர் மற்றும் திட்ட ஆலோசகர் அவர்கள் திட்டம் சம்மந்தமாக பொதுமக்கள் கேட்கும் கேள்விகளுக்கு விளக்கம் அளிப்பார்கள். பொதுமக்கள் குவாரி நிறுவுதல் திட்டத்தை குறித்த தங்களின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை அவரவர்களின் பெயர் மற்றும் இடம் ஆகியற்றை குறிப்பிட்டு தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் திட்ட உரிமையாளரும் மற்றும் திட்ட ஆலோசகரும் அதற்கு பதிலளிப்பார்கள். கூட்டத்தில் பொதுமக்கள் எழுப்பிய அனைத்து கருத்துகளும், ஆலோசனைகளும் திட்ட உரிமையாளர் மற்றும் திட்ட ஆலோசகர் அளித்த விளக்கங்களும் ஒலி, ஒளி மற்றும் எழுத்து மூலமாகவும் பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் கூறினார்.

தனது சுருக்கமான உரையின் பின்னர், பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருவாய் கோட்டாட்சியர், சேலம் அவர்களை தலைமை தாங்குமாறு கேட்டுக்கொண்டார்.

வருவாய் கோட்டாட்சியர், சேலம் அவர்கள் திட்ட உரிமையாளர் மற்றும் திட்ட ஆலோசகர் ஆகியோரை திட்டம் குறித்த தங்களின் விளக்க உரையை பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துரைக்குமாறு தெரிவித்தார்.

திட்ட ஆலோசகர் கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று, பவர் பாயிண்ட் விளக்கக்காட்சியின் உதவியுடன் முன்மொழியப்பட்ட திட்டம் குறித்து விளக்கினார்.

திட்ட ஆலோசகரின தொழில்நுட்ப விளக்க காட்சிக்குப்பிறகு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், சேலம் அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் சுற்றுச்சூழல் சம்மந்தமான தங்களின் கருத்துக்கள், சந்தேகங்கள், அச்சங்கள் மற்றும் குவாரி திட்டம் குறித்த பரிந்துரைகள் குறித்து தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

குவாரி திட்டம் குறித்து சுற்றுச்சூழல் சம்மந்தமான கருத்துக்கள், சந்தேகங்கள், அச்சங்கள் மற்றும் பரிந்துரைகள் குறித்த கருத்துக்களை தெரிவிக்குமாறு வருவாய்

கோட்டாட்சியர் சேலம் அவர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

அதன்படி, கிராம மக்களும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் தங்களின் கருத்துக்களையும், கேள்விகளையும் எழுப்பியுள்ளனர். பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளன.

**1. திரு.ஆதிமூலம், த/பெ.மணி, பாலப்பட்டி கிராமம், வாழப்பாடி வட்டம்.**

அவர் ஓட்டுனராக பணிபுரிவதாகவும், உத்தேச திட்டமானது அவரது குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்கு உதவியாக இருக்கும் என்றும் கூறினார்.

**2. திரு.ஐயம்பெருமாள், த/பெ.கந்தசாமி, பாலப்பட்டி கிராமம், வாழப்பாடி வட்டம்.**

அவர் அதே பகுதியில் வசிப்பதாகவும், உத்தேச திட்டத்திம் அமைவதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை எனவும், திட்டத்தை தான் வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

**3. திரு.முருகன், த/பெ. கந்தன், பாலப்பட்டி கிராமம், வாழப்பாடி வட்டம்**

உத்தேசிக்கப்பட்டசுரங்க திட்டத்திற்கு தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார்.

**4. திரு.ராஜா பெரியசாமி, த/பெ. பெருமாள், விளாம்பட்டி கிராமம், வாழப்பாடி வட்டம்.**

அவர் மோட்டார் மெக்கானிக்காக பணிபுரிவதாகவும், முன்மொழியப்பட்ட திட்டம் தனக்கு வேலை வாய்ப்பை வழங்கும் என்பதால் திட்டத்தை தான் வரவேற்பதாக தெரிவித்தார்.

**5.திரு.சுரேஷ், த/பெ. சின்னபையன், பாலப்பட்டி கிராமம், வாழப்பாடி வட்டம்**

அவர் வெல்டிங் பட்டறை நடத்திவருவதாகவும், உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் தொடங்கினால், தனக்கும் மற்றும் தனது வெல்டிங் பட்டறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதால் இத்திட்டத்தை வரவேற்பதாக அவர் கூறினார்.

**6.திரு.சங்கர், த/பெ.கணேசன், பாலப்பட்டி கிராமம், வாழப்பாடி வட்டம்**

தான் ஓட்டுனராக பணிபுரிவதாகவும், உத்தேசிக்கப்பட்ட திட்டம் தனக்கு வேலை வாய்ப்பு வழங்கும் எனவும் மற்றும் வாழ்வாதாரத்திற்கும் உதவியாக இருக்கும் என்றும் கூறினார். எனவே உத்தேசிக்கப்பட்ட திட்டத்தில் தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும், திட்டத்தை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

**7. திரு.செல்வமாணிக்கம், த/பெ.அங்கமுத்து கவுண்டர், கூட்டாத்துப்பட்டி கிராமம், வாழப்பாடி வட்டம்.**

உத்தேசிக்கப்பட்ட குவாரிக்கு அருகில் தான் தனது விவசாய நிலம் இருப்பதாகவும், இருப்பினும் திட்டத்தில் தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை எனவும், அவர் திட்டத்தை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

**8. திரு.மணிகண்டன், த/பெ. செல்வமாணிக்கம், அனுப்பூர் கிராமம், வாழப்பாடி வட்டம்**

தான் லாரி ஓட்டுனராக பணிபுரிவதாகவும், உத்தேசிக்கப்பட்ட திட்டம் தனக்கு வேலைவாய்ப்புக்கும் மற்றும் வாழ்வாதாரத்திற்கும் உதவியாக இருக்கும் என்றும் கூறினார். எனவே உத்தேசிக்கப்பட்ட திட்டத்தில் தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும், திட்டத்தை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

**9. திரு.ராமநாதன், த/பெ. காளியப்பன், கூட்டாத்துப்பட்டி கிராமம், வாழப்பாடி வட்டம்.**

தான் கிராமத்திற்கு வெளியே தனியார் கட்டுமான ஒப்பந்ததாரராக பணிபுரிந்து வருவதாகவும், குவாரி அமையப்பெற்றால் சொந்த ஊரிலேயே தனக்கு வேலையும், வேலை வாய்ப்பும் கிடைக்கப்பெறும் என்பதால், திட்டம் தனக்கு உதவிகரமாக இருக்கும் என்றும், திட்டத்திற்கு வரவேற்பும் மற்றும் தன்னுடைய ஆதரவையும் தெரிவித்தார்.

**10. திரு. விஜயன், அனுப்பூர் கிராமம், வாழப்பாடி வட்டம்**

அவர் தனது சொந்த கிராமத்திலிருந்து 20 கி.மீ தொலைவில் அயோத்தியாப்பட்டணம் பகுதியில் கட்டுமான ஒப்பந்ததாரராக பணிபுரிந்து வருவதாகவும், கல் குவாரி மற்றும் எம்.சேண்டு ஆகியவை அருகிலுள்ள பகுதிகளில் கிடைக்காததால் வெளியூரிலிருந்து கொள்முதல் செய்ய வேண்டியுள்ளதாகவும், அவற்றின் விலை மற்றும் லாரி வாடகை அதிகமாக உள்ளதால், தன்னுடைய கட்டுமான ஒப்பந்த வேலைக்கு கட்டுப்படியாகவில்லை என்றும் கூறினார்.

எனவே இத்திட்டம் அமையப்பெற்றால் தனக்கு மட்டுமின்றி ஏழை எளிய மக்களுக்கும் உதவியாக இருக்கும் என்றும் தனது கிராம மக்களுக்கும் குறைந்த விலையில் கட்டுமானப் பொருட்கள் கிடைக்கும் என்றும் இந்த குவாரி திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இத்திட்டத்திற்கு தனது ஆதரவையும் தெரிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, வருவாய் கோட்டாட்சியர், சேலம் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்களிடையே தங்களது கருத்துக்கள்,

அச்சங்கள், சந்தேகங்கள் மற்றும் உத்தேச குவாரி திட்டம் குறித்த சுற்றுச்சூழல் பிரச்சனைகக் குறித்த கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், சேலம் அவர்கள் கூட்டத்தை நிறைவு செய்ததுடன், கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

பொது கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்களின் பட்டியலுடன், முழு நடவடிக்கையின் ஒலி மற்றும் ஒளி வடிவிலான கருத்துருக்களும் இணைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
சேலம்

03/09/24
வருவாய் கோட்டாட்சியர்,
சேலம்